திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு விலைமதிப்புள்ள அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிற்சி நிலையம் பெரும்பாலும் பயிற்சி கொடுக்க இருக்கும். ஆனால் சென்னையிலே இருப்பது மட்டும் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சியெடுக்கிறோம். எவ்வளவு உற்பத்தி என்ற விவரம் இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, out of the trainees, how many are girl students ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம்தான் இருக்கிறது. ஆண், பெண் விவரம் இல்லை.

* 70 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

விசைக் கலப்பைகள்

* 71 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய வயல்களில் உபயோகிக்கத் தக்க பல காரிய விசைக் கலப்பைகளை (power fillers) தமிழகத்திலேயே தயாரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையைத் தஞ்சையிலேயோ, திருச்சியிலேயோ துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "சதர்ன் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன்" என்ற நிறுவனம் 10,000 பவர் டில்லர்ஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு, கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய்க்குத் திட்டமிட்டு அதற்கான அனுமதியை மத்திய சர்க்காரிடத்தில் கேட்டிருக்கிறது. வந்தவுடன் இடத்தைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

1972 ஆகஸ்ட் 11]

THIRU M. A. LATHEEF : Sir, tillers used for agricultural purposes are manufactured in the Agricultural Engineering Workshop at Washermanpet, but full utilisation is not made, from that factory. May I know if the Government would consider sympathetically to just boost up production level in the workshop and also have power tillers manufactured in the same factory?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நடக்கும் தொழிற்சாலையைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும். இது, பவர் டில்லர்ஸ் உற்பத்திக்கான புதிய அனுமதியைப் பற்றிச் சொன்னேன். இதிலே 'எக்ஸ்பேன்ஷன்' பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றித் தகவல் வந்தால் பரிசீலிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்ற கேள்விக்குப் பதில் தரவில்லை. எந்த மாவட்டத்தில் என்று திட்டவட்டமாகத் தெரிவிப்பார்களா? மேலும், ஏற்கனவே உற்பத்தி செய்யும் பவர் டில்லர்களுக்கே சந்தையில்லை என்ற நிலையிருக்கும் பொழுது, மேலும் அனுமதியைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கினால் அதற்கான மார்க்கெட்டிற்கு என்ன செய்வார்கள்? அதைப்பற்றி முன்னரே ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் சொன்ன பதிலை அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அனுமதி கிடைத்த பிறகு அவர்கள் கேட்ட மாவட்டத்திலே வைக்கலாமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். உற்பத்தியைப் பொறுத்தவரையில், பவர் டில்லர்ஸ்க்கு அனுமதியைக் கொடுப்பதற்கு இந்திய நாட்டிலுள்ள தேவையைக் கணக்கிட்டுக் கொடுக்கிறார்கள். இப்பொழுது கேரளா மாகாணம், இன்னும் சில மாகாணங்களில் இந்த பவர் டில்லர்ஸ் உற்பத்தி இருக்கிறது. ஜப்பானிய நிபுணர்களோடு பேசியதில் தமிழ்நாட்டில் பவர் டில்லர்ஸ் பயன்படுத்த முடியுமா என்று ஆராயப்பட்டது. அதில் இரண்டு கருத்துக்கள் இருந்தன. பெரிய டிராக்டர்களைப் பயன்படுத்தலாம், பவர் டில்லர்ஸ் அதிகம் பயன்படுத்த முடியாது என்ற கருத்து இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்காரின் சிபார்சின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether there is any application from the private sector for the starting of power tillers factory and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் இப்பொழுது சொன்னது பிரைவேட் செக்டார் தான்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I request the Hon. Minister to say whether there is any proposal to bring down the rate of power tiller by reducing the cost of production ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலை வந்தவுடன் எப்படி உற்பத்திச் செலவைக் குறைத்து விலையைக் குறைக்கலாம் என்று பரிசீலிக்கலாம்.

காவிரி, வெண்ணாறு பாசன மேம்பாடுகள்

*72 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கல்லணை காவிரி-வெண்ணாறு ஆகிய நதிகளைச் சீரமைத்து அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் பணிகள் எப்போது செயல்படுத்தப்படும் ?

(உ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு மதிப்பீடு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) & (உ) ஆம். 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ. 1,288.33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பகுதியின் பாசன ஏற்பாட்டினைப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் உரிய விரைவுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. 1972-73-ல் செலவிடுவதற்கு ரூ. 244.50 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கல்லணையிலிருந்து பிரிந்து, வெண்ணாறு-காவிரி ஆகியவற்றால் பயன்பெறுகின்ற, பழைய காவிரி கயவாய்ப் பகுதியின் பாசன ஏற்பாட்டைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தலும் அடங்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக இது வரையில் அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு செலவு செய்ய ஒதுக்கிய தொகை ரூபாய் 244.50 லட்சம் என்று சொன்னேன். வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரையில் செலவிட்ட தொகைக்கான கணக்கு இப்பொழுது இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றிலிருந்து பிரியும் கால்வாய்களுக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது காவிரி, வெண்ணாறு ஆகிய நதிகளைப் பொறுத்த திட்டமாகும்.